Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் எ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.சா. | - | 1 | தொழில் | - | ஓட்டுநர் (ஓய்வு) |
| பெயர். | - | மாணிக்கம் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | ராசப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | முகையூர் | வயது | - | 68 |

06.02.2026

1 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜரில்லை. 2, 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முகையூரில் வசித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். முகையூரில் வடக்கு தெருவில் எனது வீட்டிற்கும், மேலே தெய்வீகன் வீட்டிற்கும் இடைப்பட்ட இடத்தில் ஒரு 3 அடி சந்து உள்ளது. அந்த சந்து எனக்கு கிரைய அடிப்படையில் பாத்தியப்பட்டது. **அந்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.5 ஆகும்**. அந்த சந்தில் உரிமை கோரி பொது சந்து என்று ஓ.,எஸ்.156/2015 ல் திருக்கோவிலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தெய்வீகன் வழக்கு போட்டார்.

2. அந்த 3 அடி சந்தில் மண் கரைகிறது என்று நான் கல் போட்ட போது லூசீலா என்பவர் என்னை அடித்துவிட்டார். மறிக்க வந்த எனது மனைவி மற்றும் மகளை அடித்து விட்டார். இதனால் நான் ஒரு வழக்கு போட்டேன். அந்த வழக்கின் குற்ற எண்.374/2015, அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு கொடுத்திருந்தேன். அவர்களும் என் மீது வழக்கு போட்டார்கள். அந்த வழக்கு தான் இந்த வழக்கு.

3. நான் போட்ட வழக்கில் அவர்களே குற்றத்தை ஒத்துக்கொண்டு ரூ.1900/- அபராதம் செலுத்தினார்கள். ஓ.எஸ்.156/2015 ல் திருக்கோவிலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தெய்வீகன் வழக்கை அவருக்கு சாதகமாக இல்லாததால் 2021 ல் வாபஸ் பெற்றுக்கொண்டார். **அந்த உத்தரவின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.4 ஆகும்.** 2006 ல் என்னுடைய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் போட்டுள்ளார். அதற்காக ஓ.,எஸ்.429/2006 ல் திருக்கோவிலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டேன். அந்த வழக்கில் எனக்கு சாதகமாகி காம்பவுண்ட் சுவரை அப்புறப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

4. அந்த உத்தரவை எதிர்த்து விழுப்புரம் நீதிமன்றத்தில் ஏ.எஸ்.75/2012 என்ற எண்ணில் மேல்முறையீடு செய்ததில் 2016 ல் அது தள்ளுபடி ஆகிவிட்டது. **அந்த தீர்ப்பின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ. 2 ஆகும்**. அதன் பிறகு நான் 2016 ஈ.பி. போட்டு 2017 ல் ஆக்கிரமிப்பு செய்த காம்பவுண்ட் சுவரை இடித்து சொத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டேன். **அந்த சொத்து ஒப்புதல் சான்றிட்ட ஆவணம் எ.சா.ஆ.3 ஆகும்**. அதன் பேரில் உள்ள காழ்ப்புணர்ச்சியால் என் மீது இந்த பொய் புகாரை கொடுத்துள்ளார்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் நான் 1 வது எதிரி, 2 வது எதிரி எனது மனைவி, 3 வது எதிரி எனது மகள் என்றால் சரிதான். எனக்கும், அ.சா.1-ற்கு இடையே சந்து சம்மந்தமாக எவ்வளவு நாளாக தகராறு உள்ளது என்றால் 2006 லிருந்தே தகராறு உள்ளது. இது வரை காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்துள்ளேன் என்றால் 2 முறை கொடுத்துள்ளேன், 1 முறை தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. நான் கொடுத்த புகார் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.374/2015 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் அந்த புகாரையோ, முதல் தகவல் அறிக்கையோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் குற்றத்தை ஒத்துக்கொண்டதாக சொல்லும் நிலையில் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்திலிருந்து நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, காவல் நிலையத்திலிருந்து ஆர்.டி.ஐ மூலம் வாங்கி தாக்கல் செய்துள்ளேன்.

3. சம்பவம் நடந்தது 2015 ல் ஏ.எஸ்.75/2012 என்ற வழக்கு 07.03.2016 ல் தள்ளுபடி ஆகியுள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ஆவணம் 2016 ல் தான் சொத்து சுவாதீனப்படுத்தியதாக உள்ளது என்றால் 2016 ல் மனு போட்டு, 2017 ல் சுவாதீனப்படுத்தினேன்.

4. ஓ.எஸ்.156/2015 என்ற வழக்கை தெய்வீகன் வாபஸ் பெற்றது 2021 என்றால் சரிதான். அதனால் எ.சா.ஆ.2 முதல் 5 வரை உள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தப்படாதது என்றால் பிரச்சனையே 2006 ல் நான் போட்ட ஓ.எஸ்.429/2006-கு பிறகு தான் இந்த

வழக்கின் பிரச்சனை நடந்தது. குற்ற எண்.374/2016 ல் லூசியா மீது மட்டும் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், அவர் மட்டும் தான் என்னை அடித்தார், அதனால் அவர் மீது கொடுத்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றும், ஒருதனிப்பட்ட பெண் எங்கள் மூன்று பேரையும் தாக்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் அவர் அடித்ததால் நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று புகார் கொடுத்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், நானும், எனது குடும்பமும் சேர்ந்து புகார்தாரரை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.